**இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2013**

---

இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3)

மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 253,186 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் செயற்பாடு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் வருமான வரிக்கு முன்னர் ரூபா 10,077,969 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,917,457 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் அதிகரிப்பு ரூபா 3,160,512 ஆக இருந்தது. நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்காக திறைசேரி

உண்டியல்களிற்கான வட்டி வருமானம் ரூபா 3,247,755 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாடு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிச் சென்ற 03 நலன்பெறுனர்களுக்குரிய ரூபா 1,059,488 தொகைக்கான கொடுப்பனவு தாமதமாக இருந்தது.

(ஆ) சேமலாப நிதியத்தின் பங்களிப்பாரின் செலவு மீதிக்கு நிர்வாக சபையால் விதிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 09 இன் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டும் நிர்வாக சபையால் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் வினவி, அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டு வட்டி தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அதற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் வணக்கத்திற்குரிய மஹோபாத்தியாயரின் கவனத்திற்குக் அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) முதலீடு

(ஆ) கடன் மற்றும் முற்பணம்